**JUDICIAL FORM. 53**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII–Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF –CUM– JUDICIAL MAGISTRATE, KOTAGIRI**

**Case No. S.T.C.No.183/2025**

**Deposition of Witness for Defence DW1**

**திரு. கனகேந்திரன், த/பெ.கண்ணையன் வயது.48 ஊர்.ஈளாடா, பாரதிநகர், கோடநாடு, கோத்தகிரி**

**Solemnly affirmed in accordance with the provisions of act x of 1873 on this day of**

**08.05.2026** **Witness Signature :**

**DW1 குறுக்கு விசாரணை 13.08 P.M**

1. தற்போது என்னிடம் காட்டப்படும் எ.த.சா.ஆ.3 பத்திரம் ரவிச்சந்திரன் எழுதிக்கொடுத்தது என்று சொன்னால் சரிதான். இந்த பத்திரத்தில், சொல்லப்பட்ட 2 காசோலைகள் தான் இந்த வழக்கில் போடப்பட்ட காசோலைகள் என்று சொன்னால் 2 காசோலைகள் 291036, 261037 எண்ணுள்ள காசோலை எண்களை மாற்றி கொடுத்துள்ளார். அவினாசியில் ஒரு கான்ட்ராக்டர் மூலமாக வீடு கட்டிதருவதாக எதிரி, என்னிடம் சொன்னாலும் நான் நேரடியாக சென்று இடத்தைப் பார்க்கவில்லை. அவினாசி என்பது பெரிய இடம் என்பதால், எங்கு வீடு உள்ளது எந்த இடத்தில் வீடு கட்டி தருகிறார் என்று நான் சென்று பார்க்காமல் பணம் கொடுத்தேனா என்றால் பல வருடம் நட்பு என்பதால் நம்பிக்கை அடிப்படையில் கொடுத்தேன். எதிரிக்கு அவினாசியில் வீடு இல்லை என்றாலும் அவருக்கு திருப்பூரில் தான்வீடு உள்ளது. நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் பத்திரத்திரம் எ.த.சா.ஆ.3ல் திருத்தம் செய்யப்பட்டு, மேலே எழுதப்பட்டுள்ளது என்று

சொன்னால், புகார்தாரர் எழுதி கொடுத்த பத்திரத்தை நான் வாங்கினேன். திருத்தியதைப்  பற்றி எனக்கு தெரியாது. காசோலை கொடுக்கும்பொழுதே புகார்தாரர் எழுதிக் கொடுத்தார்.

2. புகாதாரரின் பத்திரம் எப்படி எனக்கு கிடைத்தது என்று சொன்னால், புகார்தாரரின் அண்ணனுக்கும் அவருக்கும் இடம் சம்பந்தமான பிரச்சனை ஏற்பட்டதால், அப்பொழுது புகார் எழுதி காவல் நிலையத்தில் நான் கொடுத்ததால் எனக்கு நியாபகம் இருந்தது, அதை வைத்து நான் தாக்கல் செய்தேன். எனது முதன்மை சாட்சியத்தில் சகுந்தலா, மகிந்தா, ஜெகன்நாதன் ஆகியவர்கள் யாரும், புகார்தாரர் எனக்கு எழுதிக் கொடுத்த பத்திரத்தில் சாட்சி கையெழுத்து போடவில்லை என்று சொன்னால் சரிதான். STC.183/2025,  STC.184/2025 ஆகிய வழக்குகளில், STC.183/2025 வழக்கிற்கான ஆவணம் தான் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்த பத்திரம் என்று சொன்னால் 2 காசோலைக்கும் சேர்த்து ஒரே பத்திரம் தான் எழுதிக் கொடுத்தார். எனது வழக்கறிஞர் அறிவிப்பிலும், வழக்கறிஞர் எதிருரையிலும், ரூ.3,00,000/-ற்கு காசோலைகள் கொடுத்ததாக கூறிவிட்டு, தற்போது ரூ.6,00,000/-ற்கு கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல, மூன்று மூன்று இலட்சத்திற்கு கொடுத்தேன்.

3. ஆறு மாதம் கழித்து, புகார்தாரர் கட்டித் தருவதாக சொன்ன வீட்டைப் பார்ப்பதாக முதல் விசாரணையில் கூறியுள்ள நிலையில், எந்த தேதியில் எத்தனை மணிக்கு வீட்டை பார்ப்பதற்காக கேட்டேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். 24.01.2018ல் வீடு கட்டித் தருவதாக, கூறி அழைகழித்தாக கூறியுள்ள நிலையில் அது சம்பந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் எனக்கும் புகார்தாரருக்கும் நட்பு இருந்ததால், நான் புகார் கொடுக்கவில்லை. இந்த வழக்கில் புகார்தாரரின் நண்பர்தான் வீடு கட்டித் தருவதாக சொன்னதான சொல்லியுள்ளேன் என்றால்

சரிதான். புகார்தாரர் சொன்னாதாலும் அவர் அங்கு வேலை செய்வதாலும் காசோலைகள் கொடுத்தேன். 2018ல் புகார்தாரர் காசோலை திருப்பியதாக எனக்கு அறிவிப்பு அனுப்பினார் என்று சொன்னால் அதைப் பற்றி எனக்கு தெரியவில்லை. 11.03.2020ம் தேதியன்று நான் வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக் கொண்டு தெரியவில்லை என்று பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

4. ஆறு வருடமாக ஏமாந்த பின்பு நான் எவ்வித நடவடிக்கையும் புகார்தாரர் மீது எடுக்கவில்லை. எனக்கும் புகார்தாரருக்கும் எப்படி பழக்கம் என்றால் என் தம்பியுடம் படித்தவர் என்பதால் பழக்கம், அவர் பஞ்சாயத்து அலுவலத்தில் டெண்டர் எடுத்து வேலை செய்து வருகிறார். புகார்தாரர் எனக்கு எந்த பத்திரமும் எழுதி தரவில்லை என்றாலும் பஞ்சாயத்தில் எழுதிக் கொடுத்த பத்திரத்தை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. புகார்தாரர், அவரது அண்ணனுடம் ஏற்பட்ட பிரச்சனைக்காக புகார் கொடுத்தபோது சர்வே எண் தெரியவந்தது என்பது தவறு என்றாலும், பஞ்சாயத்து அலுவலுருக்கு இன்சால்வென்சி கொடுப்பதற்காக கொடுத்த பத்திரம் என்று சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

**Taken down by/before me in open court read over/ interpreted to the witness in the presence of the accused/ accused's pleader and admitted by the witness to be correct.**

**Sd/–G.Amirdham,**
**Judicial Magistrate,**
**Kotagiri**